
பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை
ST.PAUL'S CHURCH AHMADI TAMIL CONGREGATION KUWAIT
அஹமதி தமிழ் திருச்சபை
PREPARE TO MEET GOD
.......என்
ஜனங்கள்
நான்
அளிக்கும்
நன்மையினால்
திருப்தியாவார்கள்...
www.jesuscalls.org
எரேமியா 31:14
இதழ் : 09
மலர் : 14



# சபை ஊழியரின் அன்பு மடல்



சபை ஊழியரின் அன்பு மடல்

## திருப்தியாவார்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும், அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த வருடம் முழுவதும் நம்மைக் கண்மனி போல பாதுகாத்து வழிநடத்தின தேவன் இந்த 2018 புது வருஷம் முழுவதும் அதிசயங்கள் அற்புதங்களோடுகூட நம் சபையை திருப்திபடுத்தி வழி நடத்துவார்.

எரேமியா தீர்க்கதரிசியின் மூலம் தேவன் வெளிப்படுத்தின வாக்குத்தத்தத்தை தேவன் நம் சபைக்கு இந்த வருடம் சொந்தமாக கொடுத்திருக்கிறார். அது என்னவென்றால்

"என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள்"
(எரேமியா–31:14) என்பதே.

என் ஜனம் என்று நம் சபை மக்களைப் பார்த்து ஆண்டவருடைய வாய் சொல்லுகிறது என்றால் அதை விடப் பெரிய பாக்கியம் வேறு என்ன இருக்கப்போகிறது? அல்லேலூயா! நாம் தேவாதி தேவனுடையப் பிள்ளைகள் அவர் நமக்குத் தகப்பன். இந்த நிச்சயத்தோடு புதிய வருஷத்திற்குள் நாம் பிரவேசிப்போம்.

சத்துருவானவன் எத்தனை இன்னல்களை நமக்குக் கொடுத்தாலும் தேவாதி தேவனுடைய பெலனைக் கொண்டு சத்துருவை நாம் ஜெயித்து மேற்கொள்வோம். வேதம் கூறுகிறது "தொடருவேன், பிடிப்பேன், கொள்ளையாடி பங்கிடுவேன் என் ஆசை அவர்களிடத்தில் திருப்தியாகும். என் பட்டயத்தை உருவுவேன் என்று பகைஞன் சொன்னான்(பிசாசு). உம்முடைய காற்றை வீசப் பண்ணினீர், கடல் அவர்களை மூடிக்கொண்டது. திரளான தண்ணீர்களில் ஈயம் போல அமிழ்ந்து போனார்கள்" **என்று.** யாத்–15:9,10. "இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன் இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்." ஏசாயா–43:23 ஆகவே தைரியத்தோடும், விசுவாசத்தோடும் புதிய வருஷத்தை துவக்குவோம். எதிலெல்லாம் நமக்கு கர்த்தர் திருப்தியைத் தருவார் என கீழ் வரும் பகுதிகளில் பார்க்கலாம்.

கர்த்தர் தாமே நம்மோடிருந்து நம்முடைய ஆவி,ஆத்துமா,சரீரத்தில் திருப்தியைத் தருவார். காரணம் நாம் அவருடைய ஜனங்கள், அவர் நம்முடைய தேவன். நம் தேவன் சொன்னால் சொன்னதே அவர் வாக்கு மாறதவர். ஒருநாளும் அவர் நம்மை கைவிடமாட்டார்.

## 1.ஆவியில் திருப்தியாக்குவார்...........

மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது, அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்கும். (நீதி-20:27)கர்த்தர் நமது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் அவர் தந்த ஆவியின் மூலமாக ஆராய்ந்து அறிகிறார். ஆகவே நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தியடைவார்கள். (மத்-5:6) என்ற வசனத்தின்படி நம் உள்ளத்தை ஆராய்கிற கர்த்தர் நம் உள்ளத்தில் நாம் கொண்டிருக்கிற நீதியின் மேல் உள்ள பசி தாகத்தையும் அறிவார். நம் ஆண்டவர் நீதியுள்ளவராயிருக்கிறார். பாவத்தின் சம்பளம் மரணம் என்ற நீதியை தாமே ஏற்றுக்கொள்ள மனித அவதாரம் எடுத்து மரணத்தை தெரிந்துகொண்டார். இந்த நீதியை சுவிசேஷமாய் அறிவிப்பதற்கு யாரெல்லாம் பாடுபடுகிறார்களோ? அவர்களுக்கு தெய்வீக திருப்தியைக் கொடுக்கிறார். வேத வசனம் கூறுகிறது " நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், பரலோக ராஜ்ஜியம் அவர்களுடையது. என்னிநிமித்தம் உங்களை நிந்தித்து துன்பப்படுத்தி பலவித தீமையான மொழிகளையும், உங்கள் பேரில் பொய்யாய் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் நியாப்பிரமாணத்திலுள்ள எல்லாம் நிறைவேறுமளவும் அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன். மத்-5:6-18.

அநீதி நிறைந்த இந்த உலகத்தில் நீதியை நிலைநாட்டுவதற்கு தேவ ஆவி நமக்கு அருளப்பட்டிருக்கிறது. அதனால் எத்தனை துன்பங்கள் நமக்கு நேர்ந்தாலும் ஆவியிலே தேவன் நமக்கு திருப்தியை அளவில்லாமல் கொடுப்பார். ஆண்டவர் நாமத்திற்காக பாடுபடவும் அவர் நீதியை நிலைநாட்டுவதற்காக உழைக்கவும் நம்மை அர்ப்பணிப்போம். தேவ நீதி என்பது என்ன? நம்முடைய பாவத்திற்கு வரவேண்டிய தண்டனையை தாமே ஏற்றுக்கொணடாரே? அதுவே தேவ நீதி. அவர் இரத்தத்தை சிந்தி, மரித்து மீண்டும் மூன்றாம் நாள் உயிரோடு இயேசு கிறிஸ்து எழும்பினார் என்ற சுவிசேஷத்தை அறிவிப்பதே நமது கடமை. பாவத்துக்கு பரிகாரியாய் இயேசு இரத்தம் சிந்தினதே தேவ நீதியாகும். இதை மற்றவர்களுக்கு அறிவிப்பதே சுவிசேஷமாகும். இந்த பணிக்காக நம்மை அர்ப்பணிப்போம். அப்பொழுது ஆவியிலே நமக்கு ஒரு பரமதிருப்தி உண்டாகும்.

பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு சொல்லுகிறார் "தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையேக் கொடுத்திருக்கிறார்.... இந்த சுவிசேஷத்திற்காக என்னோடே கூட தீங்கை அனுபவி.... அதினிமித்தம் இந்தப்பாடுகளையும் அனுபவிக்கிறேன்.... அந்த நற்பொருளை நமுக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்" என்று 2-தீமோ-2:7-14

## 2.ஆத்துமாவில் திருப்தி......

" அவர் தமது ஆத்துமா வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார், என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார். அவர்களுடைய அக்கிரமங்களை தாமே சுமந்துகொள்வார்" ஏசா-53:11 இந்த தீர்க்கதரிசனம் இயேசு கிறிஸ்துவின் சிலுவைப்பாடு மரணத்தின் மூலம் நிறைவேறியது.

ஆம், பிரியமானவர்களே! இன்றைக்கும் கர்த்தரின் சுவிசேஷத்தைக் கேட்கிறவர்கள் இரட்சிப்படைகிறார்கள். இப்படி இரட்சிக்கப்படுகிற ஜனங்களை கர்த்தர் அனுதினமும் சபையில் சேர்த்துக்கொண்டு வருகிறார்.அப்-2:47 உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுள்ளவர்களாய் இருப்பார்கள். விடியற்காலத்து கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்கு சமானமாய் உம்முடைய யௌவன ஜனம் உமக்கு பிறக்கும். சங்கீ-110:3 என்ற வசனத்தின்படி உலகத்திலுள்ள கடைசி மனிதன் வரை நிச்சயமாய் ஒரு நாளில் ஆத்தும இரட்சிப்பையடைவான் இயேசுவின் சிலுவையை நோக்கி ஓடிவருவான். முழங்கால்கள் யாவும் முடங்கும், நாவுகள் யாவும் இயேசுவே இரட்சகர் என்று அறிக்கைப் பண்ணும். இந்தக் காட்சியை பார்க்கிற நமது ஆண்டவருடைய ஆத்துமா திருப்தியாகும். அதே திருப்தி அவருடைய சுவிசேஷத்தை அறிவிக்கிற நமக்கும் கிடைக்கும். அல்லேலூயா! " நீர் என்னை உலகத்தில் அனுப்பினது போல நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன். நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்கிறதல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்" யோவா-17:14-20.

பிரியமானவர்களே! நம்முடைய சபை சுவிசேஷத்தை அறிவிக்கிற சபையாக இருக்க வேண்டும் நம்மோடு பணிபுரிபவர்களுக்கும் புறஜாதிகளுக்கும், அண்டை அயலகத்தாருக்கும் நம்முடைய சாட்சியான வாழ்க்கையின் மூலம் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். அப்பொழுது நாமும் கூட ஆத்துமு வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவோம். பவுல் அப்போஸ்தலனைப் போல நம்மாலும் சொல்ல முடியும் "நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன், விசவாசத்தைக் காத்துக்கொண்டேன்". என்று 2-தீமோ-4:7. இதுவே உண்மையான ஆத்தும திருப்தி.

"நீங்கள் அப்பமல்லாததற்காக பணத்தையும் திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன். நீங்கள் எனக்கு கவனமாய் செவிகொடுத்து நலமானதை சாப்பிடுங்கள் அப்பொழுது உங்களது ஆத்துமா செழிப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும்" ஏசா-55:2. ஆத்தும ஆதாயமே நமது செழிப்பான பதார்த்தமாக மாறட்டும். அல்லேலுயா!

## 3. சரீரத்தில் திருப்தி..........

இப்படி மேற்சொன்ன நல்ல வாழ்க்கை வாழ்கின்றபொழுது நாம் கேட்காமலேயே உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் நம்மை வந்து அடையும். அநேகர் சுயநலமாக

வாழ்வதினால்தான் இன்றைக்கு ஆசீர்வாதங்கள் இல்லாமல் பல துன்பங்களின் வழியாய் கடந்து போகிறார்கள். கர்த்தர் தருகிற திருப்தி நமக்கு எப்போதும் வேண்டும். பவுலைப் போல " நான் எந்த நிலைமையில் இருந்தாலும் மனரம்மியமாக இருக்கக் கற்றுக்கொண்டேன். "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு"...... நான் திருப்தியடைந்திருக்கிறேன்" என்று பிலி-4:11-19. என்ற வசனத்தின்படி நாமும் வாழவேண்டும். தாவீது சொல்கிறான் "நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன் ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை" என்று சங்கீ-37:25 இதே சாட்சியை நாமும் சொல்லும்படி வாழ வேண்டும் காரணம் "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும் அதனோடே வேதனையைக் கூட்டார்" நீதி-10:22 என்று வேதம் கூறுகிறது.

இல்லாமற்போகும் பொருள் மேல் உன் கண்களை பறக்க விடுவானேன். அது கழுகைப் போல சிறகுகளை தனக்கு உண்டு பண்ணிக்கொண்டு ஆகாய மார்க்கமாய் பறந்து போம். நீதி-23:5.

"நீங்கள் சம்பூரணமாய் சாப்பிட்டுத் திருப்தியடைந்து, உங்களை அதிசமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள். என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டு போவதில்லை" யோவேல்-2:26 " பசியுள்ளவனிடத்தில் உன் ஆத்துமாவை சாய்த்து சிறுமைப்பட்ட ஆத்துமாவை திருப்தியாக்கினால் அப்பொழுது இருளிலே உன் வெளிச்சம் உதித்து உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும். கர்த்தர் உம்மை நித்தமும் உன்னை நடத்தி, மகாவறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவை திருப்தியாக்கி உன் எலும்புகளை நிணமுள்ளதாக்குவார். நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போலவும் வற்றாத நீர் ஊற்றை போலவும் இருப்பாய்". ஏசா-58:10-11 இது ஆவிக்குரிய பசியைக் குறிக்கிறது. இன்றைக்கு உலக மக்களுக்கு ஆத்தும பசி காணப்படுகிறது. அந்தப் பசியை நீங்களும், நானும்தான ஆற்றமுடியும்.

இரட்சிப்பின் சுவிசேஷம் என்னும் மன்னாவை இந்த ஆத்துமாக்களுக்கு உணவாகக் கொடுக்கும்பொழுது அவர்களை திருப்திபடுத்துகிறோம். இந்தக் கடமையை நாம் நிறைவேற்றும்போது கர்த்தர் மேற்சொன்னபடி அளவில்லாமல் ஆசீர்வதிக்கிறார். அதுமட்டுமல்ல "வீடுகளைக் கட்டி அதில் குடியிருப்பார்கள். திராட்சைத் தோட்டங்களை அவைகளின் கனியைப் புசிப்பார்கள். அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனி புசிக்கிறதுமாய் இருப்பதில்லை. ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப் போல என் ஜனத்தின் நாட்களிருக்கும். நான் தெரிந்துகொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அனுபவிப்பார்கள். அவர்கள் விருதாவாக உழைக்கிறதுமில்லை, அவர்கள் துன்பமுண்டாக பிள்ளைகளைப் பெறுவதுமில்லை. அவர்களும், அவர்களோடேகூட அவர்களின் சந்தானமும் கர்த்தாராலே ஆசீர்வதிக்கப்பட் சந்ததியாயிருப்பார்கள். அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறுஉத்தரவு கொடுப்பேன். அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்" ஏசா-65:21-24.

ஆம், பிரியமானவர்களே! நம் ஜெபம் கேட்கப்படுகிறது. கேளுங்கள் அப்பொழுது

உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள் என்று சொன்ன அருள் நாதர் இயேசு கிறிஸ்து நம் தேவைகளையெல்லாம் அருள்செய்து மேற்சொன்ன அனைத்து ஆசீர்வாதங்களையும் நம் வாழ்க்கையில் நமக்குக் கொடுத்து நம்மை செழிப்படைச் செய்வார்.

தேவன் தாமே உங்கள் அனைவரோடும் இந்த வருடம் முழுவதும் கூட இருந்து உங்களுடைய ஆவி ஆத்துமா சரிரத்தில் திருப்தியைக் கொடுத்து அளவில்லாமல் ஆசிர்வதிப்பாராக!.

கர்த்தரின் பணியில்,
அன்பு சகோதரன்,
S.ஸ்டாலின்

## தேவ செய்தி

# காஜ்ஜோன் வெளிப்பாடு

பரிசுத்த வேதாகமத்தில் உள்ள எல்லா வசனங்களும் மிக அழகான அர்த்தங்கள் உடையவை. அவற்றில் சில வசனங்கள் அதன் ஆழம் அறியபடாததால் தவறாக புரிந்து கொள்ள படுகிறது. அதில் ஒரு சில வசனம்தான் நீதி மொழிகள் 29:18

நீதி மொழிகள் தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர் கெட்டு போவார்கள். தேவதத்தை காக்கிறவனோ பாக்கியவான்.

தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் : எபிரேய பாஷையில் அமைந்துள்ள மூல வேதாகமத்தில் தீர்க்கதரிசனம் என்ற வார்த்தைக்கு பொதுவாக நவயீம் ( Navi-yim) என்ற பதம் பயன்படுத்தபட்டுள்ளது. Navi என்றால் தீர்க்கதரிசி Navi yim என்றால் தீர்க்கதரிசனம் என்றும் அர்த்தமாகும். ஆனால் நீதிமொழிகள். 28:18ல் நவியீம் என்ற வார்த்தையை பயன்படுத்தாமல் காஜ்ஜோன் என்ற வார்த்தை பயன்படுத்தபட்டுள்ளது.

காஜ்ஜோன் என்பதற்கு வெளிப்பாடு (Revalation) என்று அர்த்தமாகும். கர்த்தரிடத்தில் இருந்து கடந்து வருகிற வெளிப்பாடுகள்( Revalation) இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர் கெட்டு போவார்கள் என்பதே இதன் உள்ளார்ந்த அர்த்தம்.

பழைய ஏற்பாட்டில் இந்த காஜ்ஜோன் பல வேளைகளில் தரிசனம் மூலம் கொடுக்கபட்டதால் (ஏசாயா 1:1 ஒபதியா 1:1 நாகூம் 1:1 இது பல இடங்களில் தரிசனம் என்றும் காஜோன் (வெளிப்பாடு) எதிர்காலத்துக்கான தீர்க்கதரிசனமாக இருப்பதால் சில இடங்களில் தீர்க்கதரிசனம் என்றும் இரண்டு விதமாக தமிழ் மொழி பெயர்ப்பில் (Vision) தரிசனம் என்று திருத்தப்பட்டுள்ளது. ஆனால் காஜ்ஜோன் என்பது முதன்மையான மற்றும் முழுமையான பொருள் வெளிப்பாடு என்பதாகும் கிரேக்க பாஷையில் உள்ள புதிய ஏற்பாடு எரேபிய பாஷைக்கு திருப்பபட்டுள்ளது. அதில் வெளிபடுத்துதல் புத்தகத்திற்கு காஜ்ஜோன் என்றே பெயரிடபட்டுள்ளது. தேவன் தருகிற

இந்த காஜ்ஜோன் (வெளிப்பாடு) இல்லாத இடங்களில் ஜனங்கள் சீர்கெட்டுபோவார்கள்.

ஜனங்கள் சீர்கெட்டு போவார்கள் : ஜனங்கள் சீர்கெட்டு போவார்கள் எனும் பதம் சற்று கருகலாக உள்ளது. ஜனங்கள் சீர்கெட்டுபோதல் என்பதற்கான எரேபிய பதத்தின் அர்த்தம் பாவத்தை செய்ய – தடையற்று போவார்கள் ( Be loosended of restrint)என்பதாகும் அதாவது தேவன் தருகிற வெளிப்பாட்டு அறிவில்லாத இடங்களில் ஜனங்கள் தடையில்லாமல் பாவம் செய்வர்கள் – கட்டுபாடற்று போவர்கள் – சீர்கெடுவார்கள் என்பது அர்த்தமாகும்

தீர்க்கதரிசனம் போன்றவை வெளிபாட்டின் பரிமாணங்களே மேலும் நீதிமொழிகள் (பழமொழிகள்) பெரும்பாலும் இரண்டு வாக்கியங்களை கொண்டது. அவைகள் நீதி மொழி கூற்றுகள் என்பதால் அவற்றுக்கிடையே உள்ள ஆனால் மேலும் ஆயினும் போன்ற இணைப்பு வார்த்தைகள் (Conjection) மொழி பெயற்கபடுவதில்லை நீதிமொழிகள் 29:18ல் உள்ள இரண்டு வாக்கியங்களின் இடையே ஆனால் எனும் பதம் உள்ளது ( ஆங்கில திருப்புதல்களில் But எனும் வார்ததையை காண முடியும் அதாவது தீர்க்கதரிசனமில்லாத வெளிபாடு இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டு போவர்கள் ஆனால் வேதத்தை காக்கிறவனே பாக்கியவான் இதின் அர்த்தம் என்ன?

தேவனிடத்தில் இருந்த காஜ்ஜோனை பெற்று ஜனங்களுக்கு கொடுக்கிற மகத்தான பணி ஊழியர்களுடையது. அப்படியானால் ஒரு விசுவாசி என சபை ஊழியர் சரியாக வெளிபாடுகளை பெற்றுதரவில்லை என்று சொல்லி விட முடியாது எல்லா வெளிபாடுகளும் வேதாகமத்தில் உள்ளது. வேதத்தை கைகொள்ளுகிற போது அதன் வெளிச்சம் ஒரு மனுஷரை சீர்கேடடைய விடாது கட்டுபாடற்றவனாக காணப்பட முடியாது எனவே அவன் பாக்கியவானாயிருப்பான் என்பதையே இவ்வசனம் தெளிவுபடுத்துகிறது வேதாகமமே எல்லா வெளிபாடுகளுக்கும் ஊற்றாயிருக்கிறது.

தேவனிடத்திருந்து வரும் காஜ்ஜோனால்தான் வெளிபாட்டால்தான் ஒரு மனுஷனை சீர்கேட்டிலிருந்து மீட்க முடியும் ஜனங்கள் மீறுதல் செய்யாமல் தடை செய்வது இந்த காஜ்ஜோன் தான் தேவன் யோனாவுக்கு கொடுத்த வெளிபாட்டை பெற்ற மூவாயிரம் பேர் தேவனுடைய சீரான பாதைக்கு திரும்பினார்கள்.

ஜனங்கள் மாத்திரமல்ல தனிமனிதர்களுக்கும் வெளிபாடு அரிதானவைகள் தேவனிடம் இருந்து பெற்று தருகிறது பேதுருவுக்கு பிதா தந்த ஒரு வெளிபாடு கிறிஸ்து யார் என்பதை அறியச் செய்தது. அது மாத்திரமல்ல அந்த வெளிபாட்டின் நிமித்தம் தான் பேதுரு பாக்கியவானாயிருந்தார் மத்தேயு 16:17 திருச்சபை அவர் மீது கட்டபட்டது பேதுரு கட்டவும் கட்டவிழ்கவும் அதிகாரம் பெற்றது, அந்த வெளிபாட்டால் தான் தேவன் தரும் ஒரு வெளிபாடு ஒரு காஜ்ஜோன் ஜனத்தை தேவனிடம் திருப்ப போதுமானது தேவனுக்காக நம்மை வல்லமையாய் எழும்ப வல்லது.

கிறிஸ்துவுக்குள்
அன்பு போதகர் ஜீப்லின் ஜோசப்
( பரமகுடி, தமிழ்நாடு, இந்தியா)

## 2017 டிசம்பர் மாத வேத வினாவுக்கு பதில்

1. பலி செலுத்துகிறவன் ( லேவிராகமம் 1:5)

2. கட்டளைகள் ( லேவிராகமம் 1:8)

3. குடல் தொடைகள் ( லேவிராகமம் 1:9)

4. ஆரோனின் குமாரர் ( லேவிராகமம் 1:11)

5. பலிபீடத்தண்டைகள் ( லேவிராகமம் 1:15)

6. செட்டைகளுடன் இரண்டாக்காமல் ( லேவிராகமம் 1:17)

7. மெல்லியமாவை ( லேவிராகமம் 2:1)

8. புளிப்பில்லாத அதிரசங்கள் அல்லது புளிப்பில்லாத அடைகள் ( லேவிராகமம் 2:4)

9.துண்டு துண்டாக பிட்டு அதன் மேல் எண்ணைய் வார்க்க வேண்டும் ( லேவிராகமம் 2:6)

10. ஒரு பங்கை எடுத்து பலிபீடத்தின் மேல் தகனிக்க வேண்டும் ( லேவிராகமம் 2:9)

11. எந்த போஜன பலியையும் ( லேவிராகமம் 2 :13)

12. எண்ணை வார்த்து , தூபவர்கத்தையும் போட வேண்டும் ( லேவிராகமம் 2:15)

13. பலி செலுத்துகிறவன் ( லேவிராகமம் 3:2)

14. பலி செலுத்துகிறவன் ( லேவிராகமம் 3:6,7,8)

15. அதின் கொழுப்பு, நடு வெலும்பிலிருந்து எடுத்து முழு வால், குடல்களை மூடிய கொழுப்பு அவைகளின் மேல் இருக்கிற கொழுப்பு முழுவதும் இரண்டு குண்டிகாய்கள், சிறு குடல்களிடத்தில் இருக்கிற கொழுப்பு குண்டிகாய்களோடு கூடக் கல்லீரல்மேல் இருக்கிற ஜவ்வு ( லேவிராகமம் 3:9,10)

## 2017 டிசம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. மெர்ஸிலின் தயா இயேசு ரெத்தினம்
Sis. மரகதம் ஸ்டீஃபன்
Sis. சாந்தி
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. அ.ஜோன் அசோக்

Sis. ஜீவி பாக்கியவதி வேதநாயகம்

Bro. ஜாண்
Bro. ஜாண்ஸன்
Bro. டேவிட் பாஸ்கான்

**கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தார் மற்றும் கேம்ப் சகோதரர்கள் அனைவருக்கும் அஹமதி தமிழ் திருச்சபை செய்றகுழு மற்றும் ஊழிய பொறுப்பாளர்கள் சார்பாக 2018 புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறோம்**

Wish you a Happy new year (2018)

" நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; ... " (ஆதி - 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஜெனட் ஆரோக்கியதாஸ்
செல்வி. சுனிதா சுந்தர்ராஜ்
செல்வி. புவனேஸ்வரி ஜெயகுமார்
செல்வி. பிரின்ஸி கமலதாசன்
செல்வி. சாரா ஆல்வின்
செல்வி. மோனிஷா ஜெகுமார்
செல்வி. அக்சாள் நிசி எபிநேசர்
செல்வி. காருண்யா ரவிச்சந்திரன்
செல்வி. அன்ஷிகா ஸ்டீபன்

செல்வன். கிப்டி ஆல்பர்ட்
செல்வன். சாமுவேல் ஆல்வின்

சகோதரி. சுசீலா லாசர்
சகோதரி. லைலா ஆல்பர்ட்
சகோதரி. ஜோன் ஆப் ஆர்க் அசோக்குமார்
சகோதரி. சுமதி ஐசக் துரை

சகோதரி. ஹில்டா பால் பாண்டியராஜ்
சகோதரி. விக்டோரியா ராஜன்
சகோதரி. பிரிஸ்சில்லா அந்தோனிசாமி
சகோதரி. எப்சிபா ஸ்டீபன்
சகோதரி. பிரிஸ்சில்லா செங்குட்டுவன்
சகோதரி. அஃபியா சுனில்

சகோ. இயேசுதாஸ் ஆரோக்கியதாஸ்
சகோ. சூர்யா
சகோ. ஐசக்துரை
சகோ. சுபின் சிங்
சகோ. ஸ்டான்லி பிரேம்குமார்
சகோ. செங்குட்டுவன்
சகோ. ஆரோக்கியராஜ்

உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி – திரு. தம்புகுமார் டென்னிஸ்
திருமதி – திரு. வில்கின்ஸ் தினகரன்
திருமதி – திரு. சாம் ஆனந்த்
திருமதி – திரு. மணிராஜ்
திருமதி – திரு. சாமுவேல்
திருமதி – திரு. ரீனா ரேசல் ஷர்மன்ராஜ்
திருமதி –திரு. இயேசுரெத்தினம்
திருமதி – திரு. கனீஷ் ஜோஸ்வா அமலன்
திருமதி – திரு. தினேஷ் குமார்

# 2018 ஜனவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 1/01/2018 | புது வருட ஆராதனை மாலை 4:40 முதல 6:30 வரை | |
| 07/01/2018 | Ps. Sam Rajasingh (Rajasthan, Haryana ,Ministry) | |
| 14/01/2018 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ. அற்புதராஜ் |
| 21/01/2018 | சகோ. பிரசாத் சுந்தரம் | சகோ. சுகுமார் |
| 28/01/2018 | சகோ. பால் பாண்டியன் | சகோ. தாமஸ் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/01/2018 | Ps. Sam Rajasingh (Rajasthan, Haryana ,Ministry) | |
| 12/01/2018 | சகோ. ஜசக்துரை | சகோ.கிறிஸ்டோபர் |
| 19/01/2018 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 26/01/2018 | சகோ. வேலு ராமர் | சகோ. ரவிச்சந்திரன் |

11/01 /2018 அன்று முழு இரவு ஜெபம் (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் )–
நேரம் இரவு 10 மணி முதல் அதிகாலை 2:00 மணிவரை

( சிறப்பு செய்தியாளர்.Ps. Sam Rajasingh (Rajasthan, Haryana ,Ministry)

15/01/2018 அன்று மாதாந்திர பெண்கள் ஐக்கிய கூடுகை
இடம் : அபுஹலிஃபாவில் உள்ள சகோதரி –லதா கிறிஸ்டோபர் அவர்கள் இல்லம்
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:30
(சகோதரி –லதா கிறிஸ்டோபர் அவர்கள் சார்பாக நடைபெறும் )
(வேத வினா பகுதி யோபு புத்தகத்தில் இருந்து)

26/01/2018 அன்று மாதாந்திர வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு – நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:30
(வேத வினா பகுதி பின்னர் அறிவிக்கபடும்)

# 2018 ஜனவரி மாதத்திற்கான வேத வினா!

## கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. அபிஷேகம் பெற்ற ஆசாரியன் பாவம் செய்தால், எதை பாவ நிவாரணபலியாக செலுத்த வேண்டும் ?

2. பாவ நிவாரணபலி காளையின் மீதி இரத்தத்தை எங்கே ஊற்ற வேண்டும் ?

3. பிரபு அறியாமையினாலே பாவம் செய்தால் எதை பலியாக கொண்டுவர வேண்டும் ?

4. திட்டோ குற்றமோ உள்ளவன் எதை அறிக்கையிட வேண்டும்?

5. செய்ய தாகாததென்று விலக்கபட்டதை செய்தவன் எப்படி இருப்பான் ?

6. இரா முழுவதும் விடியற்காலம் மட்டும் பலிபீடத்தின் மேல் எரிய வேண்டிய பலி எது?

7. ஆரோனும் குமாரரும் படைக்கும் போஜனபலியை என்ன பலியாக செலுத்த வேண்டும்?

8. சர்வாங்க தகன பலியின் தோலை தனக்காக வைத்திருக்க வேண்டியவன் யார் ?

9. வகைக்கு ஒன்றாக செலுத்த வேண்டிய பலி எது?

10. மோசே ஆரோனின் தலையிலே எவைகளை அணிவித்தான்?

11. கொம்புகளின் மேல் இரத்தத்தை பூசி பலி பீடத்துக்காக மோசே செய்தது என்ன?

12. சர்வாங் தகனபலியாக ஆரோன் எதை தெரிந்தெடுக்க வேண்டும்?

13. மேசேயும் ஆரோனும் ஆசாரிப்பு கூடாரத்தில் வந்து செய்தது என்ன?

14. தம்மிடத்தில் சேருகிறவர்களால் கர்த்தர் என்ன பண்ணப்படுவார் ?

15. தகனபலிகளில் ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் ஏற்படுத்தப்பட்டிருப்பது எது?

விடைகளை வருகின்ற 20-01-2018 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.. அல்லது விடைகளை (Whatapps மூலமும் அனுப்பலாம் # 66015503) விடைகளை வேதாகமத்தில் லேவியாராமத்தில் 4,5,6,7,8,9,10, பதிலைத் தேடுங்கள் .

(குறிப்பு) செயற்குழு உறுப்பினர் அல்லாது மற்றவர்களிடம் விடைத்தாள் கொடுக்கும்பட்சத்தில் ..அந்த விடைத்ததாளுக்கு செய்திமலர் பொறுப்பாளர் பொறுப்பல்ல,

**– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – –**

மத்தேயு 7:7

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பான சகோதரிகளுக்கு கருணையின் பிதா கல்வாரி நாயகனாகிய அருள் நாதர் இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

தன் பெலத்தினால் தேவனோடே போராடினான். அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான், அழுது அவரை நோக்கிக் கெஞ்சினான்; (ஓசியா 12:3,4)

தேவன் நமக்கு கொடுத்து வைத்திருக்கிற வல்லமையின் ஆயுதங்களில் ஒன்று . கண்ணீரின் ஜெபம். கண்ணீரின் ஜெபம் தேவனுடைய இருதயத்தை உலுக்குகிறது. கண்ணீரின் ஜெபம் தேவதூதர்களை கீழே இறக்குகின்றன. கண்ணீரின் ஜெபம் முழு உலகத்தையும் அதிர பண்ணுகிறது.

ஒரு நாள் யாக்கோபுக்கு தன் அண்ணனை பற்றிய கொடிய பயம் வந்தது. அடுத்தநாள் தன்னுடைய அண்ணனை சந்தித்தே ஆக வேண்டிய சூழ்நிலை. அண்ணன் என்ன மனநிலையில் இருப்பார் என்று யாக்கோபுவுக்கு தெரியவில்லை. அண்ணனுடைய சேஷ்டபுத்திரபாக்கியத்தையும், அண்ணனுக்கு வரவேண்டிய தகப்பனுடைய ஆசீர்வாதத்தை யும் தான் தந்திரமாக திருடி கொண்டதினாலே அண்ணன் கொலை செய்து விடுவார் என்று பயந்து நடுங்கிக் கொண்டிருந்தார். அதற்கிடையில் ஏசா நானூறு ஆட்களோடு யாக்கோபை எதிர்கொள்ள வருகிற செய்தி வேறு கிடைத்தது.

அப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, மிகவும் வியாகுலப்பட்டு, தன்னிடத்தில் இருந்த ஜனங்களையும் ஆடு மாடுகளையும், ஒட்டகங்களையும் இரண்டு பகுதியாக பிரித்து,ஏசா ஒரு பகுதியின் மேல் விழுந்து அதை முறியடித்தாலும். மற்ற பகுதிதப்பித்துக் கொள்ள இடம் உண்டு என்றார்.(ஆதி 32:7,8)

உள்ளம் கலங்குகிற அந்த சூழ்நிலையில் யாக்கோபு ஒரு ஆயுதத்தை பயன்படுத்த தீர்மானித்தார். அதுதான் கண்ணீரின் ஜெபம், நேராக யாப்போக்கு என்ற நதிகரையிலே, தேவ சமூகத்திற்கு முன்பாக தனியாக முழங்கால் படியிட்டு ஜெபம் பண்ணஆரம்பித்தார். முழு இரவும் தேவனோடு போராடி ஜெபம் பண்ணினார். அதை குறித்து ஓசியா தீர்க்கதரிசி அழுது அழுது அவரை நோக்கி கெஞ்சினார் என்று குறிப்பிட்டிருக்கிறார்.(ஓசியா 12:4)

கர்த்தர் யாக்கோபின் கண்ணீரை கண்டார். நம்முடைய ஆண்டவர் ஒரு போதும் நம்முடைய கண்ணீரை புறக்கணித்து கடந்து செல்லுகிறவர் அல்ல.! யாக்கோபின் கண்ணீர் தேவனை உருக்கிற்று கர்த்தர் யாக்கோபின் சகோதரனை சமாதானத்தோடு சந்திக்க கிருபை செய்தார். அது மட்டுமல்லாமல் அன்றைக்கு யாக்கோபை ஆசீர்வதித்து இஸ்ரவேலாய் மாற்றினார்.

ஆசீர்வாதங்களையும், ஆவியின் வரங்களையும் கண்ணீரின் ஆயுதத்தை பயன்படுத்தி நாம் பெற்று கொள்ள வேண்டும். தேவனுடைய ராஜ்ஜியம் பலவந்தம் பண்ணபடுகிறது. பலவந்தம் பண்ணுகிறவன் அதை பிடித்து கொள்கிறான். தேவனுடைய பிள்ளைகளே, உங்களை அநேகம் பேர் வீணாக பகைத்து கொண்டிருக்கிறார்களா? எதிராளியாய் எழும்புகிறார்களா? உங்களை பயமுறுத்தி அவதூறாய் பேசுகிறார்களா? யாக்கோபின் கண்ணீரை நினைத்துக் கொள்ளுங்கள் யாக்கோபின் தேவன் நிச்சயமாகவே உங்கள் கண்ணீர் யாவையும் துடைத்து, உங்களுக்காக வழக்காடுவார். உங்களை விடுவித்து உயர்ந்த அடைகலத்திலே வைப்பார்.

அன்னாள் கண்ணீரின் ஜெபம் ஒரு சாமுவேல்!. ஒரு தீர்க்கதரிசி பிறப்பை உருவாக்கியது.அவள் போய், மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தரை நோக்கி

விண்ணப்பம் பண்ணி,(1 சா 1:10)

மார்த்தாள் மரியாளின் கண்ணீர் மரித்த லாசருவை உயிர்பெற வைத்தது. எசேக்கியா ராஜாவின் கண்ணீர் அவருக்கு ஆயுசு நாளை கூட்டி கொடுத்தது."கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்; உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, உன் நாட்களோடே பதினைந்து வருஷம் கூட்டுவேன்.( ஏசாயா 38:5)

நம்முடைய கண்ணீர் அவருடய கணக்கில் இருக்கிறது. என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?(சங்கீதம் 56:8) கண்ணீர் அவமான சின்னமல்ல. அது தேவ பெலத்தின் சின்னம், கிறிஸ்துவின் முன்மாதிரி சின்னம். அதுவே நமது வெற்றியின் சின்னம். கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள். அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான், ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்து கொண்டு கெம்பீரத்தோடே திரும்பி வருவான்.(சங் 126:5,) அன்பான தேவனுக்கு பிரியமானவர்களே

எப்பக்கமும் தோல்விகளா? நீண்டகால போராட்டங்களா? கண்ணீரின் ஆயுதத்தை பயன்படுத்துங்கள், கண்ணீரோடு ஜெபிப்பதற்கு முழங்கால் படியிட்டுவிடுங்கள். நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நம்முடைய ஆண்டவர் ஒரு நாளும் புறக்கணிக்க மாட்டார்.

கண்ணீரின் விதைகளை தேவ சமூகத்திலே ஊற்றிவிடுங்கள், கண்ணீரின் விதைகள் இருளையும் அந்தகாரத்தையும் நீக்கி மகிமையையும், மகத்துவத்தையும் விளைய செய்யும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும் அழிவில்லாததாய் எழுந்திருக்கும், கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும் மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும். (1 கொரி 15:42,43)

கர்த்தர் உங்கள் அனைவரோடும் கூட இருப்பாராக ! ஆமென்

# "புது பெலன்"

"கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுப் பெலன் அடைந்து கழுகுகளைப் போல் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்" ஏசயா-40:31

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக, அவர் தாமே 2017-ம் ஆண்டு முழுவதும் நம்மை சுகத்தோடும், பெலத்தோடும் பாதுகாத்தார். முற்புறத்திலும், பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என் மேல் வைக்கிறீர். சங்கீ-139:5. இந்த புது வருடத்திலும் அவர் நம்மை பாதுகாத்து வழி நடத்துவார். நாம் அவருக்கு தினமும் நன்றிகளை செலுத்த வேண்டும். இந்த 2018-ம் ஆண்டில் கடந்த ஆண்டைவிட அதிகமாக பரிசுத்த ஆவியின் பெலத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.

அப்-1:5-ல் அப்போஸ்தலர்களை பார்த்து பிதாவின் வாக்குத்தத்தம் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். அப்-1:8-ல் பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்பொழுது நீங்கள் பெலன் அடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதும், சமாரியாவிலும் பூமியில் கடைசி பரியந்தம் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்று இயேசு சொன்னார்.

நாம் பரிசுத்த ஆவியின் பெலத்தை பெற்றுக் கொள்ளும்போது மட்டும்தான் தேவனுக்காக சாட்சிகளாக வாழமுடியும். பரிசுத்த ஆவியின் வல்லமை பெற்றுக்கொள்ளவில்லை என்றால் நம்முடைய சரீரம் உயிர் உள்ளதாய் காணப்படலாம் ஆனால் ஆத்துமாவில் உயிர் இல்லை. யோவா-14:14-ல் கூறுகிறார். " என் நாமத்தினாலே நீங்கள் எதை கேட்டாலும் அதை நான் செய்வேன். நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்கு தந்தருளுவார் யோவா-14:16.

நாம் இயேசு கிறிஸ்துவினிடம் வேண்டுதல் செய்யும்பொழுது பிதாவின் மூலம் இயேசு கிறிஸ்துவால் பரிசுத்த ஆவியின் பெலத்தை பெற்றுக்கொள்ள முடியும். அப்பொழுதுதான் அவர் நம்மிடம் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும் நியாத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தை கண்டித்து உணர்த்துவார். யோவா-16:8.

பரிசுத்த ஆவியின் வல்லமையை பெற்றபின்னர்தான் இயேசுவின் சீஷர்கள் இந்த உலகத்தையையே கலக்கினார்கள். கூட்டம் கூட்டமாக ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு சபைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் பெலத்தை பெற்றுக்கொள்ள காத்திருந்தார்கள். நாமும் அதிகமாக காத்திருந்து பெற்றுக்கொண்டு தேவனுக்கு பிரியமான பரிசுத்த வாழ்வை வாழவேண்டும்.

அன்பார்ந்தவர்களே!

இந்த புதிய ஆண்டில் ஆவியில் பிறந்திடும் அனுபவத்தை பெற்றுக்கொள்ளவேண்டும். அந்த மகிமையான அனுபவத்தை பெற்றுக்கொண்டு நமக்குள்ளே காணப்படும் பேதமை நீங்கி, பாவங்கள் தொலைந்திட ஆனந்தம் பிறந்திட வேண்டும். அனுதினமும் ஆவியினால் நிரம்புவோம், அழகினை சூடுவோம் அதன் மூலம் கர்த்தரை இந்த உலகத்தில் காட்டுவோம். களிப்புடன் வாழுவோம். கர்த்தருக்கு காத்திருந்தால் நம் கனவு யாவும் இந்தப் புதிய ஆண்டில் சாத்தியமே!

கர்த்தரின் பணியில்,
S.ஆல்பர்ட்

# (நம்மை ) பதம் பார்க்கும் பத்து கேள்விகள்

## நம் ஆவிக்குரிய நிலையில் செழிப்பதற்கு கீழ்காணும் கேள்விகளை தினசரி இல்லா விட்டாலும் அவ்வப்போது நம்மை நாமே கேட்டு பார்த்துக் கொள்வது நல்லது இல்லையா?

1. நான் இன்று சந்தித்த அனைவருக்கும் ஓர் வேலைகாரனாகவே இருந்தேனா?
2. நான் என் ஒவ்வொரு கலைகளையும் , பாரங்களையும் ஆண்டவர் மீது வைத்திருந்தேனா.?
3. நான் இன்று எந்த ஒரு மனுஷனின் அபிப்பிரயாங்களையாகிலும் நாடி தேடினேனா?
4. நான் இன்று ஏதேனும் நேரத்தை வீணடித்தேனா அல்லது நான் இந்நாளை பயனுள்ளதாய் செலவழித்தேனா?
5. இன்று தேவன் என்னுடன் பேச விரும்பியதை கேட்பதற்கு நான் விழிப்புடன் இருந்தேனா?
6. நான் என்னால் முடிந்த மட்டும் ஆடம்பரத்தை தவிர்த்து எளிமையாய் வாழ்ந்திட முயற்சித்தேனா?
7. நான் என் பிள்ளைகளிடத்தில் எதேனும் ஆவிக்குரிய பிரயோஜனமான காரியங்களை கலந்துரையாடினேனா?
8. நான் என் மனைவியின் (கணவனின்) வேலையில் உதவி புரிய முயற்சித்தேனா?
9. நான் பெற்ற அதே வெளிச்சத்தை பெறாத யாரேனும் ஒருவரை அலட்சியம் செய்தேனா?
10. என் இருதயத்தில் யாரேனும் ஒருவரைக்குறித்ததாவது ஏதாகிலும் கெட்ட சிந்தனை உள்ளதா?.

# இதயத்தைக் கவரும் சிலுவை

இரு வேலையாட்களுக்கு இடையே சண்டை ஏற்பட்டது. நீ பெரியவனா? நான் பெரியவனா? என்ற சண்டை அது. இறுதியில் இவ்வழக்கு வீர சூரியாவிடம் வந்தது. 150 ஐரோப்பியருக்கும், 150 இந்தியருக்கும் தலைவரான இவர் இவ்வேலையாட்களின் சண்டைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவும், இதைப் போன்ற சிந்தனை உள்ளவர்களின் செயலுக்குச் சரியான தீர்வு காண்பிக்கவும் தீர்மானித்தார்.

வேலையாட்கள் இருவரையும் அழைத்தார். அவர்களை உட்கார வைத்து, அவர்களின் கால்களை கழுவ ஆரம்பித்தார். அவர்கள் வேண்டவே வேண்டாம் என்று தடுத்தபோது " உங்கள் கால்களை நான் கழுவாவிட்டால் என்னோடு உங்களுக்கு பங்கில்லை" என்று அவர் சொல்ல அவர்களின் மனம் மெழுகுபோல உருகியது. கண்ணீரோடு அவர்கள் தங்கள் பாவத்தை உணர்ந்து, பெரியவர் சிறியவர் என்ற சண்டையை மறந்து சகோதரராயினர்.

வீர சூரியா இலங்கையில் ஒரு புத்த குடும்பத்தில் பிறந்தவர். இளம் வயதில் ஒரு ஆலய ஆராதனையில் கலந்தகொண்ட போது, கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர். அப்போது அவருக்கு வயது 24. தன் இருதயத்தில் நிறைந்த இயேசுவை, தன் நண்பர்களுக்கு அறிவிக்கத் தொடங்கினார். அநேகர் இவர் மூலம் இரட்சிக்கப்பட்டனர். இரட்சண்ய சேனை இயக்கத்தில் உறுப்பினராக இணைந்த இவர், அன்பையே ஆதாரமாகக் கொண்டு கிறிஸ்துவைப் போல் வாழ்ந்து காட்டினார்.

புத்த வாலிபர்கள் சிலர் இவர் மேல் எரிச்சலுற்று, இவரைக் கொல்ல வகைத் தேடினர். இதையறிந்த இவர், அவர்களைத் தனியே ஒரு காட்டிற்கு வரவழைத்தார். தான் கையில் எடுத்துச் சென்ற கயிற்றை அவர்களிடம் கொடுத்து, ஒரு மரத்தில் கட்டச் செய்தார். பின்னர் கத்தியை அவர்களிடம் கொடுத்து, தன்னை அவர்கள் விருப்பத்திற்கு தன்னை வெட்டச் சொன்னார். அவர்களோ தங்களின் தவறை உணர்ந்து, இவரிடம் மன்னிப்பு கேட்டனர். இவரின் வாழ்வு முறையினால் கவரப்பட்ட அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். இவர் 30 வயதிற்குள் அநேகரை இரட்சிப்புக்குள் நடத்தி, இறைவனின் மார்பில் சாய்ந்தார்.

அன்பரே! கிறிஸ்தவர்களின் முன் மாதிரியாக வாழ நீங்கள் தயாரா?

என்னைவிட இயேசுவை சிநேகிக்கிறவர்கள் உண்டானால், அவர்கள் பாதம் நான் தேடி உட்கார்ந்து படிப்பேன்—வீர சூரியா.

கர்த்தரின் பணியில்,
S.சுகுமாரன்.

## வாலிபமே கர்த்தரை தேட சரியான பருவம்

வாலிபமே கர்த்தரை தேட சரியான பருவம் கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். ( ஏசாயா 55:6)

தேவன் நம் வாழ்க்கையை மிக அழகாக நேர்த்தியாய் திட்டமிட்டு அமைத்திருக்கிறார். தேவன் அமைத்த திட்டமிட்ட நேர்த்தியான அந்த உன்னத நிலையில் நம்மை பொருத்தி , தேவ சித்தத்தின்படி நம்மை இணைத்துக் கொள்வது மிக உத்தமான தேவ செயலாகும். ஆனால் தேவன் நம்மை வைக்கும் இடத்தில் நாம் சந்தோஷமாய், மகிழ்ச்சியாய் இருக்க வேண்டியது நமது கடமை.

தேவனின் மகத்துவம் நிறைந்த வேதத்தில் பெண்மையினமும் அங்கம் வகிக்கிறது, என்பதை நோக்கும் போது, தேவன் நம்மீது வைத்த சிநேகமும் , கரிசனையும் தான் என்னவென்று சொல்லி விவரிக்க முடியாது.

வேதஅடிப்படையில் வாலிப பிராயத்தில் எப்படி ஆண்டவருக்காக வாழ வேண்டும் என்பதை நாம் பார்ப்போம். "உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.(1 தீமத்தேயு 4:12) விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய (வாலிபனான) தீமத்தேயுவுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் அடியார் எழுதிய புத்திமதிகளும், கட்டளைகளும் நிரம்பிய நிருபத்தின் ஓர் வசனமே, "மாதிரியாய் இரு" என முடிந்தது ஆகும். அவர் 15 வயதினிலே தேவனுடைய பிள்ளையாய் மாற்றபட்டார் என்பது வேத வல்லுனர்களின் ஆராய்ச்சியின் கூற்றாகும். ஆனால் ஏழு வருடங்களுக்குள் "நற்சாட்சி" பெற்றவன். ( அப் 16:1,2) நற்சாட்சி பெற்றதன் காரணம் மாதிரியாய் இருந்ததால்தான் . எனவே நமக்கு மாதிரியாய் ஜீவிக்க முடியும் என்பதற்கு சவாலான எடுத்துகாட்ட முடியாத காரியத்தை தேவன் வேதத்தில் இடம் பெற செய்திருக்க மாட்டார். நம்மை செய்யவும் சொல்ல மாட்டார். தேவன் பெலபடுத்தும் போது நம்மால் மாதிரியாய் இருக்க முடியும் .

அப் (1:8)ம் வசனத்திலும் தேவன் வானத்திற்கு எடுத்து கொள்ளப்படும் முன் கடைசியாய் சொல்லி போன வார்த்தையும் அதுவே "சாட்சிகளாயிருப்பீர்கள்" வாக்குத்தத்தம் பண்ணபட்ட பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றுக்கொண்டால் மாத்திரமே சாட்சியாய் , மாதிரியாய் ஜீவித்து நற்சாட்சி பெற முடியும். வயதானவர்கள் மரிக்கும் போது கடைசி மணி நேரத்தில் சொல்லி போன வார்த்தைகளை கூடுமானவரை 98% நிறைவேற்றுவார்கள். அழிந்து போகிற மனிதனின் கடைசி வார்த்தைக்கு அப்படிபட்ட மதிப்பும், நிறைவேறுதலும் இருக்குமானால், அழியாத இன்றும் ஜீவிக்கிற நம் ஆண்டவரின் வார்த்தைக்கு பயமும், மதிப்பும், நிறைவேற்ற பிரயாசபடுதலும், எத்தனை அத்தியாவசமானது என்று சிந்திப்பது அவசியம்.

முதலாவது வார்த்தையில் மாதிரியாய் இருக்க கட்டளை, இது பொதுவாக மனிதர்களுக்கு இயலாத காரியம், நம் வார்த்தையினாலே நம்மை ஆண்டவரும் நியாயம் விசாரிப்பார். (மத் 12:37)

வார்த்தைகளை பேசுவதில் ஜாக்கிரதையாய் இல்லையெனில் நம் தேவபக்தி வீணாகி விடுமே. (யாக் 1:26), (1:19) பேசுவதற்கு பொறுமையாய் இருப்போம். (நீதி 1:29) ம் வசனத்தின் படி பாவம் செய்கிறோம்

வார்த்தையினாலே எதிர்த்து பேசுவது, முறுமுறுப்பு, சண்டை, விரோதம், விவாதம், பல தீமைகள் வருகிறது, பிரியமான வாலிப சகோதர சகோதரிகளே யாக்கோபு நிருபத்தை அதிக கவனமாய் வாசித்து கைகொள்வோம் தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக .ஆமென்.

# கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு





# சபையோருக்கு
# 2018 ஆம் ஆண்டின்
# இனிய
# புத்தாண்டு வாழ்த்துக்கள்

## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

### செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஜெகநாதன்

23917287 - 66889535

பொருளாளர்– சகோ. எபநேசர்

23922058 - 66857827

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . தயா இயேசுரெத்தினம்

23924262 - 94974732

வாலிப ஐக்கிய தலைவர் – சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only